# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
Tamilnadu Government Employees' Association
(பதிவு எண் 237/84)
தோழர் எம்.ஆர்.அப்பன் இல்லம்
எண். 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை 600 005.
28441286 / 28440938 பேக்ஸ் : 28443601 e-mail : tngeags@gmail.com

மாநிலத் தலைவர்
**மு.சுப்பிரமணியன்**

பொதுச் செயலாளர்
**மு.அன்பரசு**

மாநில துணைத் தலைவர்கள்
**ந.குமாரவேல்**
**ஆ.செல்வம்**
**எஸ்.தமிழ்ச்செல்வி**
**சு.பார்த்திபன்**
**மொ.ஞானத்தம்பி**
**மு.சுப்பிரமணியன்**

மாநிலப் பொருளாளர்
**எம்.தங்கராஜ்**

மாநிலச் செயலாளர்கள்
**இரா.பன்னீர்செல்வம்**
**சி.ஆர்.இராஜகுமார்**
**என்.ஜனார்த்தனன்**
**தி.கலைசெல்வி**
**எம்.சௌந்தரராஜன்**
**ஏ.பெரியசாமி**


ஊடகச் செய்தி.எண்.22/2017 நாள்.-28-06-2017

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் சார்பில் அதன் தலைவர் திரு. **மு. சுப்பிரமணியன்** மற்றும் பொதுச் செயலாளர் திரு.**மு. அன்பரசு** ஆகியோர் கூட்டாக விடுக்கும்

ஊடகச் செய்தி

## அரசின் நடவடிக்கைகள் நம்பிக்கையளிக்கவில்லை !

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின 12வது மாநில மாநாட்டின் முடிவின்படி அரசு ஊழியர்களுக்கான 8வது ஊதிய மாற்றம் செய்ய வேண்டும் 20 சதவீதம் இடைக்கால நிவாரணம் வழங்க வேண்டும், புதிய ஓய்வூதியத்திட்டத்தை ரத்து செய்ய வேண்டும், சத்துணவு, அங்கன்வாடி, ஊராட்சி செயலாளர்கள், கிராம உதவியாளர் போன்றோர்களுக்கு காலமுறை ஊதியம் வழங்க வேண்டும், சாலை பணியாளர்களுக்கு 41 மாத பணி நீக்க காலத்தை பணிக்காலமாக அறிவிக்க வேண்டும், அவுட்சோர்சிங், தொகுப்பூதிய நியமனங்களை ரத்து செய்து, தற்போது பணி புரியும் ஊழியர்களை நிரந்தரம் செய்ய வேண்டும் போன்ற 6 அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி ஏப்ரல் 25 முதல் காலவரையற்ற வேலை நிறுத்தப் போராட்டம் அறிவிக்கப்பட்டது. திட்டமிட்டபடி ஏப்ரல் 25 அன்று வேலை நிறுத்தம் தொடங்கியது. வேலை நிறுத்தம் நடைபெற்றபோது ஏப்ரல் 26 அன்று தமிழக அரசின் மூத்த அமைச்சர்களான பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் மாண்புமிகு கே.,ஏ. செங்கோட்டையன்,நிதித்துறை அமைச்சர் மாண்புமிகு டி. ஜெயகுமார், வருவாய்த்துறை மாண்புமிகு ஆர்.பி. உதயகுமார் மற்றும் நிதித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர்

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
Tamilnadu Government Employees' Association
பதிவு எண் 237/84
தோழர் எம்.ஆர். அப்பன் இல்லம்
எண் : 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.
தொலைபேசி எண் : 28441286, 28440938, 28443886 பேக்ஸ் : 28443601

ஆகியோர் தலைமையில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாநில நிர்வாகிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. பேச்சுவார்த்தையின்போது ஊதிய மாற்றக் குழு தனது அறிக்கையை குறிப்பிட்ட காலக் கெடுவுக்குள் சமர்ப்பிக்கும் எனவும், சிறப்புக் காலமுறை ஊதியம் பெறுபவர்களுக்கு காலமுறை ஊதியம் வழங்க பரிசீலிக்கும் எனவும், புதிய ஓய்வூதிய திட்டத்தை ரத்து செய்ய ஜூலை இறுதிக்குள் பேசி முடிவு செய்யப்படும் எனவும், சாலைப்பணியாளர்களின் 41 மாத பணி நீக்கக் காலத்தை வரன்முறை செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும், அவுட்சோர்சிங், தொகுப்பூதிய மற்றும் தினக்கூலி முறை நியமனங்கள் ரத்து செய்ய பரிசீலிக்கப்படும் எனவும் உறுதியளித்ததின் அடிப்படையில் வேலைநிறுத்தம் நல்லெண்ண அடிப்படையில் விலக்கிக் கொள்ளப்பட்டது.

ஊதிய மாற்றக்குழு அறிவித்த 22-02-2017 அன்றைய மாண்புமிகு முதல்வரின் அறிவிப்பில் நான்கு மாத காலத்திற்குள் அறிக்கையை சமர்ப்பிக்கும் எனத் தெரிவிக்கப்பட்டது. ஆனால் அறிவிப்பில் தெரிவித்ததற்கும் 26-04-2017 அன்றைய பேச்சுவார்த்தைக்கும் மாறாக நான்கு மாத காலம் முடிவுற்றும் ஊதிய மாற்றக்குழு தனது அறிக்கையை சமர்ப்பிக்கவில்லை. ஏனைய கோரிக்கைகள் மீதான நடவடிக்கைகளிலும் முன்னேற்றமில்லை.

மேற்படி போக்குகள், அரசு ஊழியர்களின் நலனில் இந்த அரசின் நடவடிக்கைகள் நம்பிக்கையளிக்கவில்லை என்பதையே காட்டுகிறது. எனவே 26-04-2017 அன்று பேச்சுவார்த்தையில் உறுதியளித்தபடி, அரசுஊழியர்கள் மத்தியில் நம்பிக்கை ஏற்படும் வகையில் ஊதிய மாற்றக்குழு அறிக்கையை பெற்று அரசு ஊழியர் மற்றும் ஆசிரியர்களுக்கு 8வது ஊதிய மாற்றத்தை உடன் அறிவித்து வேலை நிறுத்தம் போன்ற போராட்டங்களை தவிர்க்குமாறு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது.

(மு. அன்பரசு)

பொதுச்செயலாளர்